உ

ஓம் தத் ஸத்.

# சமரசநிலய சன்மார்க்க

# வாக்கியோபதேசம்

459/2



சுவாமி நிர்மலானந்தம்

க. வேதாசலம்,

திருத்தணி.

1927.

நேஷனல் பிரஸ், பெங்களூர்.

உ

ஓம் தத் ஸத்.

# சமரசநிலய சன்மார்க்க
# வாக்கியோபதேசம்,

இவை ஆருதாரவிலாச
முதலிய நூலாசிரியர், வித்வான்
கன்னிபுத்தூர்
வேலாயுத முதலியார் குமாரரும்
மார்க்கண்டேயவர்க்கம்
ஸ்ரீமத் சிவானந்த சுவாமிகள்
மாணவருமாகிய,
தணிகை சுவாமி நிர்மலானந்தம்
**க. வேதாசலம்**
அவர்களால் இவற்றி
பெங்களூரில் தமது மாண
வர்களால் பிரசுரிக்கப்பட்டது.

ஓம் சாந்தி.

உ

ஓம் தத் ஸத்.

வேதாந்த தர்க்கபோதகாசிரியர்

ஸ்ரீலஸ்ரீ கோ. வடிவேலு

செட்டியாரவர்கள்

இயற்றிய

# நிலைமண்டில ஆசிரியப்பா.

அமரர்கள் போற்று
மரும்பெருந் தன்மைய

சமரச நிலய
சன்மார்க் கத்தின்

வாக்யோப தேசம்
மாணவர் தமக்குப்

போக்குமா றில்லாப்
புண்ணியம் வாய்ப்ப

நான்குசா தனங்கள்
நன்கமைந் தோங்க

வான்குண மனைத்தும்
மாறு துயர
நிர்மலா னந்தன்
நிறைகுணம் வாய்ந்தோன்
தர்மமெ லாமறி
சாமிவே தாசலன்
கண்ணுளா ருவக்கக்
கலைமக ளேற்கத்
திண்ணமா யியற்றிச்
சீர்பெற் றனனே.

சாற்றுக்கவி சம்பூர்ணம்.

ஓம் சாந்தி.

---

ஓம் தத் ஸத்.

## கணபதி துதி.

கனநிதி யறிவெனுங் கணபதி மூல
வனற்பதிமரை மலரருளடி சரணம்

நித்தியம் நிராமயம்
நிஷ்களம் நிரஞ்சனம்
நிரவயம் நிரீந்த்ரியம்
நிர்மலம் குரும் சிவம்.

---

## குரு வணக்கம்.

பந்த பாச பகுப்பினி லுற்றவென்
சிந்தை வந்த திமிர மலமொழித்
தந்த மில்லறி வாக வருட்சிவா
னந்த தேசிகன் நாளு முளத்துளன்.

ஓம் சாந்தி.

உ

ஓம் தத் ஸத்.

சமரசநிலய சன்மார்க்க

# வாக்கியோபதேசம்.

## உயிர் வருக்கம்.

அறிவோ டிரு
ஆறுத லடைந்திரு
இன்பதுன்ப மற்றிரு
ஈடணையை விட்டிரு
உன்னை யுணர்ந்திரு
ஊண்சுவை பாராதிரு
எனதுன தெனாதிரு
ஏசினும் பேசாதிரு
ஐயாசை யகன்றிரு
ஒன்றிரண் டற்றிரு
ஓங்காரத் துள்ளிரு
ஔவியஞ் சொலாதிரு

ஓம் சாந்தி.

உ

ஓம் தத் ஸத்.

குருபாதம்துணை.

---

உள்ளதறிவென்
றுணர்விலுணர்
சித்திரவிளக்கெனச்
செம்மையாப்பழகு
சங்கறுப்பதுவென
அங்கமலமறு
முப்பாழ்கடந்
தப்பாலிரு
மும்மாயைமூன்று
தத்வம்முப்பாழ்
அறுவகைக்குற்ற
மற்றதறிவாம்

செத்தசவத்தை
யொத்துத்திரி
பாவியெனுநாமம்
பூவிலெடுக்காதே
நிதானமென்பதை
விதானமாக்கொள்
பத்திசித்தியே
முத்தியதற்கிடம்
குருபத்தியே
சிரத்தையாக்கொள்
பெரியோரைப்பேண
லுரிமையெனவிரு
காமமென்பதை
நாமமறத்தேய்
குரோதமென்பதை
விரோதமெனத்தள்

உலோபந்தன்னு
ஓனுத்தனென்றிரு
மோகமதனிற்
சோகமுறாதே
மதத்தாற்பிறரை
மதியாதிராதே
மாற்சரியத்தாற்
காய்ச்சலுறாதே
எம்மதமும்
சம்மதமென்றிரு
மோக்ஷவழியை
முற்படத்தேடு
நானெனல்விட்டு
நாட்டத்திரு
வீணர்சேவை
காணவில்லாதே

தோதகமாதர்க்
காதல்கொள்ளாதே
தந்தைதாய்தமர்
பந்தமென்றெண்ணு
பந்துக்களலவிவர்
பந்தமென்றுட்கொள்
உன்னிற்பதியை
யுணர்வெனவேயுணர்
ஏகாந்தங்கொண்
டிருப்பதினிது
தன்னினைப்பொழியத்
தானதுவாமே
அவத்தாத்திரய
மகன்றப்பாலிரு
உண்டுறங்கும்போதி
லொன்றுமங்கில்லை.

ஒட்டைக்கூடு
ஓதனமேடு
இருந்தபடியிருந்
தருளைப்பொருந்து
மேய்ப்பானைமேய்த்து
பார்ப்பானைப்பாரு
சின்மயமாகத்
தன்மயமாக்கும்
பிறப்பிறப்பென்னு
நினைப்புமறப்பறு
ஆசையற்ற
தாத்துமபூசை
அந்தக்கரண
மடங்கப்பழகு
நீயதுவென்னு
நினைப்பருதிரு

தன்னைவிடுத்தயற்
பின்னமுறாதே
இங்கற்பவாழ்வின்
சங்கற்பமறு
தன்னைச்சிவமென
மன்னியதாயிரு
அறியாமைவிடுத்
தறிவாகவிரு
சாதனையேற்றி
வாதனைமாற்று
ஆவிக்காவியைப்
பாவிக்காதே
உறவினர்யாரு
முறங்கியபோதிலே
சும்மாவிருப்பது
துவந்தத்தசியாம்

ஒன்றிரண்டென்ன
வுரையாடாதிரு
புழுமலக்கூடு
புகுமிடுகாடு
நையுமுடலை
நானென்றிராதே
சிவகாருண்ணியஞ்
சிறந்ததெனக்கொள்
ஈசுரபத்திசெய்
தாசையையகற்று
பாசவைராக்கியமே
பேசருமுத்தி
பிரம்மஞானமே
பேசாமோனம்
வாக்குமனமணு
காததவ்வான்பொருள்

ஓவியமென்ன
யொத்தமனத்திரு
தேகாபிமானம்
தீமையேயாக்கும்
மண்ணைக்கருதிமண்
ணாகுமிவ்வுடம்பு
தன்னையறியப்
பின்னைக்கேடில்லை
நினைப்புமறப்பு
தனைப்பிரிந்திரு
மூர்த்தமென்பது
முதற்குருதரிசனம்
தலமெனல்தேசிகன்
றங்கியவிடமாம்
தீர்த்தமென்பது
தேசிகன்வாக்கியம்

சத்தியவாக்கு
சதோதயமாக்கும்
தத்துவத்தைதக்கல்
சத்தியத்தில்நில்
முத்திநெறியினை
நித்தம்நினைநினை
சிவானந்தங்கூடும்
பவானந்தமோடும்
இதுவேநன்னெறி
மதியைக்கொண்டறி
தற்போதவழி
சாராமலொழி
அன்பர்பணிசெய
வின்பநிலைவரும்
கோதிலறிவானற்
பாதகமலம்போம்

குருமொழிகொண்டு
கருவழிநீக்கு
சொப்பனவுலகைக்
கற்பனையாக்காண்
பேசாமோனமே
நிராசையதற்கிடம்
சின்மயசுகமே
தன்மயமாக்கும்
நானெனலற்றால்
ஞானமதுறுமே
குருவுருநினைக்கத்
திரிமலந்தீரும்
ஒன்றிலும்பற்றற
நின்றதுவேநிலை
நல்லறம்புரிய
எல்லவர்க்குஞ்சொல்

பொறிபுலன்சென்ற
நெறியினிற்காதே
அன்பேபூசை
யமலமுறச்செய்
நன்றுந்தீது
மொன்றெனநாடு
அடக்கமுடையார்க்
கானந்தம்விளங்கும்
சினமுதலியகொடு
தினந்திரியாதே
சிரியர்பெரிய
ரறிவினிற்கொள்ளு
ஈசனைநாளு
மிதயத்திருத்து
ஆசானுமீசானும்
பேசிலொன்றுவர்

காரணகாரியங்
கடந்தப்பாலிரு
உறவுபகையென்
றறிவழியாதே
தானலாதொருபொருட்
டரணியிலில்லை
போதநீயல்லை
சோதிப்பிரம்மநீ
ஞானசாதனம்
நணுகுஞ்சிவபதம்
நித்தியாநித்திய
வத்துவிதென்றறி
இகபரவாழ்வுகள்
ளென்றுமனித்தியம்
அறுவகைச்சமாதியே
ஆத்மசம்பத்தி

சூத்திரகாயம்
பார்த்திடமாயம்
மாவைநிறுத்தி
ஓவியம்போலிரு
வேண்டாமென்பதே
விழுமியசெல்வம்
வேண்டுமென்பதே
வியாதியென்றிரு
சித்தநிச்சலமே
நித்தியமாஞ்சிவம்
பொன்பெண்மண்ணைப்
பொருளென்றிராதே
மன்னுயிர் தன்னுயி
ராய்மதித்தோம்பு
தன்னைச்சீவ
னெனத்திரியாதே

நீநானென்னத்
தானலையாதே
நனவிற்சுழுத்தி
நண்ணப்பழகு
ஐயறிவகற்றி
ஆறுவதறி
தனித்திருவிழித்திரு
தான்பசித்திரு
விரவியவருணிலை
வேதாசலப்பேர்
நிருமலன்வாக்கு
நின்னறிவாக்கும்
சாந்திதாந்தி விஸ்
ராந்தியைக்கொள் ஓம்.

வாக்கியோபதேசம் முற்றிற்று.

ஓம் சாந்தி.

ஓம் தத் ஸத்.

# நிஜானந்த லகரி.

---

## உயிர் வருக்கம்.

### சந்த விருத்தம்.

அருணிருமலசுக
நிலைபெறு தருணமி
தடுத்தறிவீர் வாரீர்

ஆசையையற்றநி
ராசையே பூசையென்
றனுதினஞ் செயப்பாரீர்

இரவிதுபகலிது
வெனத்துயின்றெழுவதிங்
கிறப்புபி றப்போரீர்

ஈடணைநிந்தை
யகந்தையிகந்தநி
னிகல்களை யத்தேரீர்

உத்தமசத்திய
சன்மார்க்கந்தலை
யுற்றெழு கிடநேரீர்

ஊனெனுமுடலதை
நானெனல் விட்டுமற்
றுணர்வுரு வெனவோரீர்

எல்லையிலாதசர்
வேஸ்வர மாமையயி
னியலிருந் தமைதீரீர்

ஏசறுநிலையினி
னின்றவப்படியங்
கிருந்திடம் பொருள்சாரீர்

ஐவகைப் பிராந்தி
யகற்றிடுஞ் சற்குரு
வருட்பணி விடைகோரீர்

ஒப்பிலதத்வ
மஷிப்பொரு ளப்பொரு
ளுயரநு பவஞ்சேரீர்

ஓமெனுந்தத்தஸத்
குருதுரியப்பத
வுண்மையை யுறக்காரீர்

ஔவியமுற்றற
நிமல வேதாசல
வடிமைசொல் லகமாரீர்.

ஓம் சிவம் சம்பூர்ணம்.
ஓம் சாந்தி.

உத்தமசத்திய
சன்மார்க்கந்தலே
யுற்றெழு கிடநேரீர்

ஊளினனுமுடலதை
நானெனல் விட்டுமற்
றுணர்வுரு வெனவோரீர்

எல்லேயிலாதசர்
வேஸ்வர மாமையி
னியலிருந் தமைதிரீர்

ஏசறுநிலேயினி
னின்றவப்படியங்
கிருந்திடம் பொருள்சாரீர்

ஐவகைப் பிராந்தி
யகற்றிடுஞ் சற்குரு
வருட்பணி விடைகோரீர்

ஒப்பிலதத்வ
மஸிப்பொரு ளப்பொரு
ளுயரநு பவஞ்சேரீர்

ஓமெனுந்தத்தஸத்
குருதுரியப்பத
வுண்மையை யுறக்காரீர்

ஔவியமுற்றற
நிமல வேதாசல
வடிமைசொல் லகமாரீர்.

ஓம் சிவம் சம்பூர்ணம்.

ஓம் சாந்தி.

ஓம் தத் ஸத்.

# நிர்மலபோதம்.

---

## உயிர்வருக்கம்.

அறிவோரறிஞர்
அறிவிலார்வறிஞர்

ஆங்காரந்தீரு
அதுபிறப்போரு

இகல்பேசுவதென்
இருந்தபடிநில்

ஈவிரக்கங்கொள்
ஈரிஷையைத்தள்

உயர்சன்மார்க்கம்
ஒன்றுநன்மார்க்கம்

ஊன்மலியாக்கை
உணுநரிகாக்கை

எழிலுணர்விலசுதர்
இயற்கதிர்நெற்பதர்

ஏசறுகுருபதம்
இறுகப்பிடிநிதம்

ஐயமேற்றுண்பார்
அறிவிலாரலர்தேர்

ஒற்றுமைகற்றார்
உயர்நலம்பெற்றார்

ஓதாதார்க்கிலை
உயர்சிவபதநிலை

ஔவ்யமில்நிமலன்சொல்
அறிவேதாசலம்.

ஓம் சிவம் சம்பூர்ணம்.

ஓம் சாந்தி.

---

உ

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ சற்குருமலர்த்
திருவடிவாழ்க

சித்தசித்துமில்லாச்
செறிபிரமந்தானுய
சுத்தசிவத்தின்னருளாற்
றொல்லுலகிற்முன்றங்குக!

வத்துவாய்நிறைவாய்
வயங்கியசிவத்தின்
அத்துவாவடிவறிந்
தாருயிரோங்குக!

அறிவையறிந்தறி
யாமையை வெல்குக!

இங்கங்கிதுவது
வெனுமனவிருத்தி
சங்கற்பமற்றுத்
தனிலுணர்ந்துருகுக!

உத்தமகுணமாஞ் சுத்தசத்துவ
தத்துவஞான சாதனமல்குக!

எனுதுனுதெனுமிக்
கோணலை நீக்கிச்
சனுதிப னென்னத்
தானறம் புரிக!

ஒப்பிலிஷ்ட சித்திவேல்
உணர்விலுணர்த்துந்
தணிகைவேல்!
செப்புமஷ்ட சித்திவேல்
செழிக்க நிலயத்துற்றவேல்.

ஓம் குருபாதம் துணை.
ஓம் சிவம் சாந்தம்.
ஓம் சாந்தி.

இப்புத்தகம்
சென்னை திருவேட்டீசன்
பேட்டை,
சமரசநிலய சன்மார்க்க
சபையிலும்,
பெங்களூர் தண்டு
(கல்ஹள்ளிக்கடுத்த சின்ன ஏரி)
நிர்மல ஆனந்த நிலயத்திலும்
கிடைக்கும்.

---

பிரபவஸு புரட்டாசி மதி.

காப்பி 2000.